
இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 08-06-2023

# நேருக்கு நேராக வரலாம்!

**ஆளுநர் ஆர்.என்.இரவிக்கு தைரியம் இருந்தால் நேருக்கு நேராக அரசியல் களத்துக்கு வந்து மோதட்டும். அதைவிட்டு ஆளுநர் பதவிக்குள் பதுங்கிக் கொண்டு அரசியல் செய்ய முனையக் கூடாது. ஜாகையை கமலாலயத்திற்கு மாற்றிக் கொண்டு களத்துக்கு வரட்டும். அப்போது முழுமையாக வைத்துக் கொள்ளலாம் கச்சேரியை!**

ஒரு நியமனப் பதவியில் உட்கார்ந்து கொண்டு தினமும் அவர் செய்து கொண்டு வரும் குடைச்சல்கள் சகிக்க முடியாதவையாக இருக்கின்றன. அவர் ஏதோ இந்திய நாட்டின் குடியரசுத் தலைவரைப் போலவோ அல்லது இந்திய மன்னரைப் போலவோ மனதுக்குள் நினைத்துக் கொள்கிறார். தமிழ்நாட்டில் உட்கார்ந்து கொண்டு தமிழ்நாட்டுக்கு எதிரான அனைத்தையும் செய்து கொண்டு இருக்கிறார் ஆர்.என். இரவி. அதேநேரத்தில் மற்ற பல மாநிலத்தின் விழாக்களை இங்கே உட்கார்ந்து கொண்டு கொண்டாடிக் கொண்டு இருக்கிறார்.

★ குஜராத் மாநிலம் உருவான தினம்
★ மகாராஷ்டிரா மாநிலம் உருவான தினம்
★ மிசோரம் மாநிலம் உருவான தினம்
★ கோவா மாநிலம் உருவான தினம்
★ தெலுங்கானா மாநிலம் உருவான தினம் –

– என்று மற்ற மாநிலங்கள் உருவான தினத்தைக் கொண்டாடிக் கொண்டு இருக்கிறார். பொழுது போகவில்லை என்றால் ஊரில் உள்ள அனைவர் பிறந்தநாளையும் கொண்டாடிக் கொள்ள வேண்டியது தான். மனதுக்குள் இந்திய நாட்டையே தான் ஆள்வதாக அவர் நினைத்துக் கொள்கிறார் போலும்!

**‘தமிழ்நாடு’ என்று சொல்லக் கூடாதாம். ஆனால் மற்ற மாநில விழாக்களை தமிழ்நாட்டில் கொண்டாடுவாராம். ‘மாநிலங்களே எதற்காக?’ என்று கேட்பாராம். ஆனால் வாராவாரம் மாநில விழாக்களைக் கொண்டாடுவாராம். ‘மாநிலங்களே இந்தியாவின் ஒருமைப்பாட்டைக் குலைக்கிறதாம்’. ஆனால் அவர் மட்டும் ஒரு மாநிலத்தின் ஆளுநராக இருந்து கொண்டு அதிகாரத்தை அனுபவிப்பாராம். எத்தகைய ஏமாற்று இது?!**

புதிய கல்விக் கொள்கையை வலியுறுத்தும் வகையில் துணை வேந்தர்கள் மாநாட்டை நடத்தப் போவதாக ஆளுநர் சொன்னார். ‘இணைவேந்தரான எனக்கே தெரிவிக்காமல் துணைவேந்தர்கள் கூட்டத்தை எப்படி நடத்தலாம்?’ என்று உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் பொன்முடி கேட்டார். உடனே பதுங்கினார் ஆளுநர். புதிய கல்விக் கொள்கை பற்றிய ஆலோசனைக் கூட்டம் என்று முதலில் அறிவிக்கப்பட்ட கருத்துருவையே மாற்றி, தாய்மொழிக் கல்வியை வலியுறுத்தும் மாநாடு போல மாற்றிச் சொன்னார்கள். தாய்மொழிக்கல்வி குறித்து ஆளுநருக்கு ஏதாவது கருத்து இருக்குமானால் அதனை தமிழ்நாடு அரசுக்கோ அமைச்சருக்கோ தான் சொல்ல வேண்டுமே தவிர துணைவேந்தர்களை எல்லாம் ஊட்டிக்கு அழைத்து சொல்ல வேண்டிய அவசர அவசியம் என்ன வந்தது?

**பல்கலைக் கழகத் துணைவேந்தர்களைக் கூட்டி வைத்துக் கொண்டு – தொழில் முதலீடுகளை ஈர்ப்பதைப் பற்றி பேசி இருக்கிறார் ஆளுநர். துணைவேந்தர்களிடம் என்ன பேச வேண்டும், தொழிலதிபர்களிடம் என்ன பேச வேண்டும் என்ற அடிப்படை கூடவா தெரியவில்லை?**

தமிழ்நாட்டை நோக்கி முதலீடுகள் வந்து கொண்டு இருக்கின்றன. கடந்த இரண்டு ஆண்டு காலத்தில் 250க்கும் மேற்பட்ட புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன. ரூ.2 லட்சம் கோடி மதிப்பிலான திட்டங்கள் இவை. தொழில் முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தப்பட்டுள்ளது. உலகளாவிய தொழில் முதலீட்டாளர் மாநாட்டை வரும் 2024 சனவரியில் நடத்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திட்டமிட்டு முனைப்புடன் செயல்பட்டு வருகிறார். துபாய் மற்றும் ஐக்கிய அமீரக நாடுகளுக்குச் சென்று முதலீடுகளை ஈர்த்து வந்துள்ளார் முதலமைச்சர் அவர்கள். பத்து நாள் பயணமாக ஜப்பான், சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்குச் சென்று ரூ.3000 கோடி மதிப்பிலான ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு அவர்களை தமிழ்நாட்டில் தொழில் தொடங்க வைத்துள்ளார். ‘ஐயகோ! தமிழ்நாடு முன்னேறிவிடுமோ?’ என்று சில வயிற்றெரிச்சல் பேர்வழிகள் அலறுவதைப் போல ஆளுநரும் அந்தக் கூட்டத்தில் சேர்ந்துவிட்டார் போலும்!

**‘நாம் வேண்டுகோள் விடுப்பதாலோ அல்லது அவர்களது நாடுகளுக்குச் சென்று பேசுவதாலோ மட்டும் முதலீட்டாளர்கள் முதலீடு செய்ய முன்வரமாட்டார்கள். முதலீடு செய்வதற்கேற்ற சூழலும் திறன்பெற்ற மனித ஆற்றலும் இருந்தால்தான் முதலீட்டாளர்கள் முன் வருவார்கள்’ என்று தனது பொறாமைக் குணத்தை வார்த்தைகளால் முணுமுணுக்கிறார் ஆளுநர். முதலீட்டுச் சூழலும் திறன் பெற்ற மனித ஆற்றலும் இங்கு இருப்பதால் தான் தமிழ்நாட்டை நோக்கி நிறுவனங்கள் வருகின்றன. அதனை இவர்கள் எல்லாம் கெடுக்காமல் இருந்தால் போதும். சென்னையில் இருந்து காஞ்சிபுரம் – திருவள்ளூர் – ஸ்ரீபெரும்புதூர் – சோழிங்கநல்லூரைச் சுற்றி வந்தால் போதும் உருவாகி நிற்கும் நிறுவனங்கள் பலதும் தமிழினத் தலைவர் கலைஞரின் 1996-2001 ஆட்சி காலத்தில் மலர்ந்தவை. அப்போது எந்த ஆர்.என்.இரவிக்கள் அறிவுரைப் படி இதனைச் செய்யவில்லை கலைஞர். இந்தியாவில் யாரும் உருவாக்க முன் வராத காலத்தில் உலக ஐ.டி.நிறுவனங்கள் அனைத்தும் ஒரே இடத்தில் இருக்க டைடல் பார்க் கட்டியவர் கலைஞர். அதனால்தான் அவரது பெயரால் மிகப் பெரிய கன்வென்ஷன் சென்டர் உருவாக்க இருக்கிறார் இன்றைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள். இந்த மாநிலத்துக்கும், மாநில மக்களுக்கும் எதைச் செய்து தர வேண்டும் என்பது திராவிட முன்னேற்றக் கழக அரசுக்குத் தெரியும். ஏனென்றால் தி.மு.க.என்பது தமிழ் மண்ணில் மலர்ந்து 75 ஆண்டுகளைக் கடந்து வளர்ந்து நிற்கும் – காலா காலத்துக்கு நிற்கும் ஆலமரம் ஆகும்.**

**ஆளுநர் பதவி என்பது ஒன்றியத் தலைமையால் தற்காலிகமாக கொண்டு வந்து வைக்கப்படும் குரோட்டன்ஸ் தொட்டி. தொட்டி, தோப்பாகாது. எனவே, வெட்டிப் பேச்சுகளை விடுக்க ஆளுநரைக் கேட்டுக் கொள்கிறோம்!**

## அடையாறு மண்டலம் - அண்ணா சாலையில் புதிய பூங்கா!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் திறந்து வைத்தார்!

சென்னை, ஜூன் 8-

சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ், ரூ.28 இலட்சம் மதிப்பீட்டில் அடையாறு மண்டலத்திற்குட்பட்ட அண்ணா சாலையில் புதிய பூங்கா அமைக்கும் பணியினை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்து, எல்.டி.ஜி. சாலை மற்றும் வேளச்சேரி பிரதான சாலையில் ரூ.30.50 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு பல்நோக்கு கட்டடம் மற்றும் நியாயவிலைக் கடைகளை திறந்து வைத்தார்.

பெருநகர சென்னை மாநகராட்சி, அடையாறு மண்டலம், வார்டு169க்குட்பட்ட அண்ணா சாலையில் சிங்கார சென்னை 2.0 திட்டத்தின் கீழ், ரூ.28 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பூங்கா அமைக்கும் பணியினை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (06.06.2023) அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, மதிப்பிற்குரிய துணை மேயர் மு.மகேஷ்குமார் அவர்களின் 169ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் கீழ், எல்.டி.ஜி. சாலை மற்றும் வேளச்சேரி பிரதான சாலையில் முறையே ரூ.14.50 இலட்சம் மற்றும் ரூ.16 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு பல்நோக்கு கட்டடம் மற்றும் நியாயவிலைக் கடைகளை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து, அத்தியாவசியப் பொருட்களை வழங்கினார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (6.6.2023) முகாம் அலுவலகத்தில், மூத்த வழக்கறிஞரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பி.வில்சன் சந்தித்து, சென்னை அண்ணா மேம்பாலம் அருகில் தோட்டக்கலை துறைக்குச் சொந்தமான, 1,000 கோடி ரூபாய் மதிப்பிலான, 115 கிரவுண்ட் நிலம் சட்டப்போராட்டம் நடத்தி மீட்கப்பட்டதையொட்டி வாழ்த்துப் பெற்றார்.

### முதல் கட்டமாக ரூ.125 கோடியில்

# 500 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, ஜூன் 8-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.6.2023) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் சென்னை, தேனாம்பேட்டை, விஜயராகவா சாலையில் உள்ள நகர்ப்புற நலவாழ்வு மையத்தில் நடைபெற்ற விழாவில் முதற்கட்ட மாக தலா 25 இலட்சம் ரூபாய் செலவில் மொத்தம் 125 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள 500 நகர்ப்புற நலவாழ்வு மையங்களை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

தமிழ்நாட்டு மக்களுக்கு உயர்தர மருத்துவ வசதிகள் கிடைத்திட, புதிய அரசு மருத்துவ மனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களை கட்டுதல், மருத்துவமனைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், மருத்துவக் கருவிகளை நிறுவுதல், அனைவருக்கும் நலவாழ்வு என்கிற உயரிய நோக்கினை செயல்படுத்தும் வகையில் “மக்களைத் தேடி மருத்துவம்” சாலை விபத்துக்களில் உயிரிழப்புகளை தடுக்கும் வகையில் “இன்னுயிர் காப்போம்நம்மைக் காக்கும் 48” போன்ற பல்வேறு திட்டங்களை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை வாயிலாக தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது.

அந்த வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்று ஓராண்டு நிறைவடைந்ததையொட்டி 7.5.2022 அன்று சட்டப்பேரவை 110 விதியின் கீழ், தமிழ்நாடு மக்களின் சுகாதாரத் தேவைகளை மென்மேலும் மேம்படுத்திடும் விதத்தில் தமிழ்நாட்டில் கிராமப்புறங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்களை இருப்பதைப் போல நகர்ப்புறங்களில் மக்கள் அரசுப் பொது மருத்துவமனையை நோக்கி வரும்போது மருத்துவமனைகளில் கூட்டம் அதிகமாகி வருகிறது. இந்நிலையை மாற்றி, ஒருங்கிணைந்த, தரமான மருத்துவ சேவைகளை மக்களின் இருப்பிடங்களுக்கு அருகிலேயே வழங்கிடும் நோக்கில், பெருநகர சென்னை மாநகராட்சி உள்ளிட்ட 21 மாநகராட்சிகள் மற்றும் 63 நகராட்சிப் பகுதிகளில் 708 நகர்ப்புற நலவாழ்வு மையங்கள் புதிதாக அமைக்கப்படும் என்று அறிவித்தார்.

அதன்படி முதல்கட்டமாக, பெருநகர சென்னை மாநகராட்சி உள்ளிட்ட மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிப் பகுதிகளில் 125 கோடி ரூபாய் செலவில் 500 நகர்ப்புற நல வாழ்வு மையங்கள் தலா 25 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைக்கப்பட்டது.

இந்த ஒவ்வொரு நகர்ப்புற நலவாழ்வு மையத்திலும் ஒரு மருத்துவர், ஒரு செவிலியர், ஒரு சுகாதார ஆய்வாளர், ஒரு தூய்மைப் பணியாளர் என 500 மருத்துவர்கள், 500 செவிலியர்கள், 500 சுகாதார ஆய்வாளர்கள் மற்றும் 500 தூய்மைப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். காலை 8.00 மணி முதல் 12.00 மணி வரையிலும் மாலை 4.00 மணி முதல் 8.00 மணி வரையிலும் இம்மையம் செயல்படும். இந்நகர்ப்புற நலவாழ்வு மையங்களின் மூலம் இப்பகுதியில் வாழும் சுமார் 25 ஆயிரம் மக்கள் பயன்பெறுவர்.

புதிதாக அமைக்கப்பட்டுள்ள இந்த நகர்ப்புற நலவாழ்வு மையங்களின் மூலம், மகப்பேறு நல சேவைகள், பச்சிளம் குழந்தை மற்றும் குழந்தை நல சேவைகள், வளர் இளம் பருவத்தினருக்கான சேவைகள், குடும்பக் கட்டுப்பாடு சேவைகள், தொற்று நோய்களுக்கான சேவைகள், தொற்றா நோய்களுக்கான சேவைகள், கண், காது, மூக்கு, பல், வாய் மற்றும் தொண்டை நோய்களுக்கான சேவைகள், முதியோர் மற்றும் நோய் ஆதரவு நல சேவைகள், அவசர மருத்துவ சிகிச்சை சேவைகள், மனநல சேவைகள் மற்றும் யோகா போன்ற பல்வேறு நலவாழ்வு சேவைகள் நகர்ப்புற மக்கள் குறிப்பாக, குடிசைவாழ் மற்றும் நலிந்த மக்களுக்கு தரமான முறையில் மருத்துவ வசதி பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்த நகர்ப்புற நலவாழ்வு மையங்கள், நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையங்களின் துணை மையங்களாக செயல்பட்டு அனைத்து அத்தியாவசியமான ஆரம்ப சுகாதார சேவைகளை மக்கள் எவ்வித பொருட்செலவின்றி அவர்களின் வசிப்பிடத்திற்கு அருகாமையிலேயே பெறுவதோடு அல்லாமல் அரசு மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளை ஆரம்ப சுகாதார தேவைகளுக்காக மக்கள் தேவையின்றி அணுகும் சூழ்நிலையையும் குறைக்கிறது.

இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் தயாநிதி மாறன், மரு. கலாநிதி வீராசாமி, திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர் மரு.நா.எழிலன் உள்ளிட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர் மு. மகேஷ் குமார், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் மரு.ஜெ.ராதா கிருஷ்ணன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தேசிய நலவாழ்வு குழும இயக்குநர் திருமதி ஷில்பா பிரபாகர் சதீஷ், பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டல குழுத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், வாரியத் தலைவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மேலும், மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களிலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை பணியாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

## திருநின்றவூரில் மாற்றுக் கட்சியினர் கழகத்தில் இணைந்தனர்!

திருவள்ளூர் ஜூன் 8 –

திருவள்ளூர் மாவட்டம் திருநின்றவூர் நகரம் நாம் தமிழர் கட்சியின் நகரக் கழகச் செயலாளர் தங்கராஜ் தலைமையில் அக்கட்சி நிர்வாகிகள் பா.கார்த்திக், துளசிதரன், சு.திலீப்குமார், முத்துராமலிங்கம், லோகநாதன், ப.செ.காருனிஸ்வரன், சித்து ராஜா, த.சிவகுமார், கார்த்திகேயன், ஹரி பிரசாத், மோஹன், பாபு, செண்பகபாண்டியராஜன், ஸ்ரீனிவாசன், செ.சௌந்தர், ஹேமநாத், ஜெ.ராகேஷ், தினேஷ்குமார், ஆதித்யன், வெற்றிய செல்வன், பவித்ரா உள்பட 20க்கு மேற்பட்டோர் நாம் தமிழர் கட்சியில் இருந்து விலகி கழகத்தில் இணைந்தனர்.

நிகழ்ச்சியை திருநின்றவூர் நகரக் கழக செயலாளர் தி.வை.இரவி ஏற்பாட்டில் திருவள்ளூர் மத்திய மாவட்ட செயலாளரும் முன்னாள் அமைச்சருமான ஆவடி சா.மு. நாசர் எம்.எல்.ஏ. முன்னிலையில் திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்துக் கொண்டார்கள் இதில் திருநின்றவூர் நகராட்சி மன்ற தலைவர் உஷாராணி ரவி உள்பட கழக நிர்வாகிகள் உள்ளனர்.



கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில் உள்ள நெடுஞ்சாலையில் சாலையோரம் மரக்கன்றுகள் நடும் பணியை நேற்று முன்தினம் (6.06.2023) பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மற்றும் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் ஆகியோர் மரக்கன்றுகள் நட்டு தொடக்கி வைத்தனர். உடன் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் அ.அருண்தம்புராஜ், கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா.இராஜேந்திரன், விருத்தாசலம், சட்டமன்ற உறுப்பினர் எம்.ஆர்.இராதாகிருஷ்ணன், காட்டுமன்னார்கோயில் சட்டமன்ற உறுப்பினர் மா.சிந்தனைச் செல்வன், கடலூர் மாநகர மேயர் திருமதி.சுந்தரி ராஜா, மாநகர துணை மேயர் பா.தாமரைச் செல்வன், மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் இரா.இராஜாராம் ஆகியோர் உள்ளனர்.